Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா: 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY மக்கள் இதழ்

நாதம்: 02 மார்ச் (12 - 03 - 1991) செவ்வாய்க்கிழமை ஓசை 22

## குழந்தைகள் மனோதத்துவ டாக்டர் யாழ். வருகின்றார்

(யாழ்ப்பாணம்)

நோர்வே நாட்டைச் சேர்ந்த குழந்தைகள் மனோதத்துவ நிபுணர் டாக்டர் எலிசபெத் எதிர்வரும் 14ஆம் திகதி மாலை யாழ்ப்பாணம் வரவுள்ளார். றெட்பானா சிறுவர் நிவாரண புனரமைப்புத் திட்ட நிறுவனத்துக்கு வருகைதரும் இவர், நான்கு நாட்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பார். அரசாங்க சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பு ஒன்றியத்தில்

(4ஆம் பக்கம் பார்க்க)

தமிழ் நாட்டு அரசியலில்

# இலங்கைத் தமிழ் மக்கள் துயர் விற்பனை பண்டமாயுள்ளது

## நாடகக் கலைஞர்களுக்கு பயிற்சி வகுப்புகள் ஒழுங்கு

(யாழ்ப்பாணம்)

வானொலி நாடகக் கலைஞர்களுக்கான பயிற்சி வகுப்பு ஒன்றினை 'நிதர்சனம்' நிறுவனம் ஒழுங்கு செய்துள்ளது.

இந்தப் பயிற்சி வகுப்பில் வானொலி நாடக எழுத்தாளர்கள், நடிகர்கள், தயாரிப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொள்ளலாம் எனவும் அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

கலந்துகொள்ள ஆர்வம் உள்ள அனைவரும் 15ஆம் திகதிக்கு முன்னரோ அல்லது அதற்கு முன்பாகவோ 'நிதர்சனம்' அலுவலகத்தில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

## கிழக்கு இலங்கையில் புலிகளின் தாக்குதல்கள் அதிகரித்துள்ளன

### - கொழும்பில் இராணுவ அதிகாரி

(டில்லி)

கிழக்கு இலங்கையில் விடுதலைப்புலிகள் தங்களது தாக்குதலை அதிகரித்துள்ளதாக கொழும்பில் நேற்று இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்தவார இறுதியில் திருகோணமலை மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தைச் சேர்ந்த 15 பேர்கள் உட்பட 50பேர் கொல்லப்பட்டதாக சிறிலங்கா இராணுவ அதிகாரியை மேற்கோள் காட்டி இந்திய வானொலி அறிவித்தது.

## தமிழ்க் குழுக்களுக்கு பிரேமதாசா தேறுதல்

(கொழும்பு)

அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னா வெளிநாடு சென்றுள்ளார் என்று நினைத்துக் கொண்டு உறுதியாக நடவடிக்கைகளைத் தொடருங்கள். இவ்வாறு அமைச்சரின் கொலைக்குப்பிறகு முதன் முறையாக ஜனாதிபதியைச் சந்தித்த தமிழ்க் குழுவொன்றுக்கு ஜனாதிபதி ஆர். பிரேமதாசா கூறியுள்ளார். ஜனாதிபதியைச் சந்தித்த தமிழ்க் குழுவினர் வடக்கு-கிழக்கு நிலைமை பற்றியும் பேசினார்கள்.

## "பட்டியலில் வரும் பொருள்கள் கப்பலில் வருவதில்லை"

### - யாழ். மேலதிக அரசாங்க அதிபர்

(யாழ்ப்பாணம்)

"பட்டியலில்வரும் பொருள்கள் கப்பலில் வருவதில்லை" இவ்வாறு யாழ் மாவட்டத்துக்கு கொழும்பு அத்தியாவசிய சேவைகள் பகுதியினரால் அனுப்பிவைக்கப்படும் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் தொடர்பாக மேலதிக அரசாங்க அதிபர் திரு. எஸ். சண்முகநாதன் கருத்து வெளியிடுகையில் கூறினார்.

கடந்தபல மாதங்களாகப் பகுதி பகுதியாக [illegible] துறை

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிரியர்களின் ஓய்வூதியமோ கொடுப்பனவுகளோ வரவில்லை

### - சுந்தரலிங்கம்

(யாழ்ப்பாணம்)

புதிய ஆண்டுக்கான ஆசிரியர் ஓய்வூதியமோ சம்பளம் தவிர்ந்த வேறு எந்த கொடுப்பனவுகளோ தமக்கு இன்னும் அனுப்பி வைக்கப்படவில்லை என யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு இரா. சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் சம்பளம் தவிர்ந்த வேறு கொடுப்பனவுகள் பெற்றுக்கொள்ள யாழ். கல்வித் திணைக்களத்திற்கு அடிக்கடி வந்து தொல்லை தரும் ஓய்வூதியர்களை தம்முடன் ஒத்துழைக்கும்படியும் கேட்டுக் கொண்டுள்ளார். (ரோ)

## கிட்டு (கிருஷ்ணகுமார்) கவலை

(லண்டன்)

தமிழ்ப் பிரதேசங்களில் அத்தியாவசியப் பண்டங்கள் இல்லை. குழந்தைகளுக்கான பால்மாக்கூட இல்லை. இந்நிலையில்கூட தமிழ்நாட்டில் இலங்கை வாழ் தமிழ் மக்களின் துயர் விற்பனைப்பண்டமாக இருப்பது கவலை தருகின்றது என ஹிந்துப் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் விடுதலைப்புலிகளின் சர்வதேச விவகாரங்களுக்குப் பொறுப்பான திரு கிருஷ்ணகுமார் (கிட்டு) தெரிவித்தார்.

மேலும் அவர் தனதுபேட்டியில் அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னா படுகொலை போன்றதொன்றைச் செய்வதற்கான தொழில் நுட்பத்தை எந்தப் புத்தகத்தையும் படித்துப் பழகிக் கொள்ளலாம் என தெரிவித்தார்.

இந்தக் கொலையில்கூடபோ ரைதயாரிக்கப் பயன்படுத்திய தொழில் நுட்பம் மிக நவீனமானது. புலிகள் மட்டுமே இதனைச் செய்திருக்க முடியும் என்று தாம் நினைப்பதாகச் செய்தியாளர் கூறியபோதே கிட்டு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கம் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண முடியாது முட்டுக்கட்டை போட்டு இராணுவத் தீர்வு ஒன்றுதான் வழி என்று வற்புறுத்தியவரும் ரஞ்சனே. இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டவரும் இவரே என்றும் கிட்டு கூறினார், கொலையுண்ட நாளான மார்ச் 2-இல் ரஞ்சன் அநுராதபுரம் செல்ல இருந்தார் மடுவில இராணுவ நடவடிக்கையை மேற்பார்வை செய்து வழிநடத்தவும் இருந்தார்

சில தினங்களுக்கு முன்ன

(4ஆம் பக்கம் பார்க்க)

## நான் உயிருடன் இருக்கிறேன்

### - ஜே. ஆர்.

(கொழும்பு)

"நான் உயிரோடு இருக்கிறேன்" இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி ஜே ஆர். ஜெய

(4ஆம் பக்கம் பார்க்க)

## கும்புறுபிட்டியில் ஐந்து தமிழர் ராணுவத்தால் வெட்டி கொலை

(திருக்கோணமலை)

கும்புறுபிட்டியில் கடந்த 8ஆம் திகதி சிறிலங்கா ராணுவத்தால் ஐந்து பேர் கொடூரமான முறையில் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

திருமலை நகரில் இருந்து கும்புறுபிட்டி கிராமம் பதினைந்து மைல் தொலைவில் உள்ளது. கொல்லப்பட்டவர்களில் கதிரவேல்பிள்ளை (வயது 66) இவருடைய மனைவி க. புஷ்பராணி (வயது 35), சார் [illegible] (வயது 70, ஆகி

முஸ்லிம் ஊர்காவற்படை-

யோர் அடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்ட புஷ்பராணியின் கணவர் ஏற்கனவே சிறிலங்கா ராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## படகின் மீது பீரங்கித் தாக்கு; மூவரின் நிலை தெரியவில்லை

(செ. த. மை)

பருத்தித்துறை கூடத்தனை கடற் பகுதியில் படகொன்றின்மீது, கடற்படையினர் பீரங்கித் தாக்குதல் மேற்கொண்டதில் மூவரின் நிலைமை தெரியவில்லை: ஒருவர் கடலில் பாய்ந்து நீந்திக் கரைசேர்ந்தார். படகு பருத்தித்துறை சேர்ந்த ஒருவருடையது. [illegible] கரையை வந்தடைந்தது.

கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற இச் சம்பவத்தில் க. துரைரத்தினம் (வயது 28) வ. தம்பிராசா (வயது 32), ந. சபாபதி (வயது 23) ஆகிய மூவரின் நிலையும் அறியமுடியவில்லை வல்வெட்டித்துறையைச் சேர்ந்த தம்பையா சூரி (வயது 30) என்பவர் கடலில் நீந்திக் கரைசேர்ந்தவர்.

## கைது செய்த தமிழ் குடும்பத்தின் நிலைபற்றித் தெரியவில்லை

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் சம்பூர் என்ற இடத்தைச் சுற்றி வளைத்த முஸ்லிம் ஊர்காவற்படையினர் தமிழ்க் குடும்பமொன்றைக் கைது செய்துள்ளனர். இவர்கள் இதுவரை விடுவிக்கப்படவில்லை.

கடந்த மாதம் [illegible] திகதி இரவு 7-45 மணியளவில் திருகோணமலையிலுள்ள சம்பூர் பகுதியைச் சுற்றிவளைத்த முஸ்லிம் ஊர்காவற்படையினர் திரு. பஞ்சலிங்கம் என்பவரையும் அவ

(4ஆம் பக்கம் பார்க்க)

## குசினிக்குள் விழுந்த ஷெல்; இரு பெண்கள் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கடற்படையினரால் ஏவப்பட்ட ஷெல் ஒன்று காரைநகர் வாரிவளவுப் பகுதியிலுள்ள வீடொன்றின் சமையலறைக்குள் வீழ்ந்து வெடித்ததில் அங்கு சமையலில் ஈடுபட்டிருந்த இரு பெண்கள் படுகாயமுற்றனர். விறகு பறித்த

(4ஆம் பக்கம் பார்க்க)

வரிவிளம்பரம்

# திறந்தவை மூடமுடியவில்லை மூடியவைதிறக்கமுடியவில்லை

### ஆங்கிலக் கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் சகல தரப்பினருக்கும் ஆங்கிலம் ஆரம்ப அறிவிலிருந்து தனிப்பட்ட முறையிலும் உங்கள் வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப்படும். நேரில் அல்லது கடித மூலம் தொடர்பு கொள்ளவும். S. ஜெயராஜா C/o S சச்சிதானந்தம் கிராம சேவை உத்தியோகத்தர், உடுவில் உடுவில் மகளிர் பாடசாலைக்கு முன்பாக) (R- 1184)

### தவறி விட்டது

பெப்ரவரி முதல் வாரத்தில் வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் வந்த ஒருவர் தன் இருகைப்பை களைத் தவறவிட்டார். புடவைகள் குழந்தைகளுக்குரிய புதிய உடைகள், பிறநாட்டுக் கடிதங்கள், படங்கள், நான்கு இருபுத்தகப்புகள் இருந்தன. கடிதங்கள், படங்களை திருப்பி களை யாராவது எடுத்தவர்கள் திரு இராஜலிங்கம் இளைப்பாறிய தபாலதிபர், தண்டிக்குளத்தில் கொடுக்கவும் சன்மானம் வழங்கப்படும். R- 1175)

தொழும்பு ஸ்ருடியோ புளொக் (Block புகைப் படம் தயாரிப்பு, லாப்பம் ஓவியம், பிறேம் போடுதல் கலர் பிலிம் சுருள்கள் ஸ்ரிக்கேர் முதலியவற்றிற்கு நாடுங்கள் கொழும்பு ஸ்ருடியோ, யாழ்ப்பாணம் (R- 2090)

### THE JAFFNA EDUCATION CENTRE

The Jaffna Education Centre யாழ்ப்பாண கல்வி நிலையம் யாழ் சாந்தி சினிமா முன்பாக மேல் மாடியில் O L A/L IAB Spoken English Shorthand Typing இரு மொழிகளிலும் நடைபெறுகின்றன. (B-2107)

### மூவர் பலி

இரத்தினபுரி கரங்கொட தொலைவில விகாரையின் மேலுள்ள பாறை சரிந்து விழுந்ததில் யாத்திரிகர்கள் மூவர் பலியாகினர் பலியாகிய மூவரும் பபிலிபிட்டியாவில் இருந்து மேற்படி விகாரைக்கு யாத்திரை மேற்கொண்டு வந்தவர்களாகும்.

(யாழ்ப்பாணம்)

திறந்த பெட்டிகளை மூட முடியவில்லை. மூடிய பெட்டிகளை திறக்கமுடியவில்லை, இவ்வாறான பெட்டிகளை திருத்தியமைக்க முடியவில்லை.

மேற்படி பரிதாபகரமான நிலைமை சிறிலங்கா தபால் திணைக்களத்திற்குச் சொந்தமான யாழ் மாவட்டத்தில் உள்ள நூற்றுக்கணக்கான தபால் பெட்டிகளுக்கு ஏற்பட்டுள்ளது

யாழ் மாவட்டத்தில் சுமார் 750 தபால் பெட்டிகள் பொது மக்களின் பாவனைக்காக தபால் திணைக்களத்தால் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் பரவலாக நிர்மாணிக்கப் பட்டிருந்தன. இவற்றில் சுமார் 300 தபால் பெட்டிகள் சேதமடைந்த நிலையில் உள்ளன. இவற்றின் கதவுகள் திறந்தால் மூட முடியாமலும் மூடினால் திறக்க முடியாத நிலையில் சில தபால் பெட்டிகளும் முற்றாகச் சேதமடைந்த நிலையில் சில தபால் பெட்டிகளும் — கறையான், பாம்பு போன்ற பிராணிகளின் பிரதான வாழிடங்களாக சில தபால் பெட்டிகளும் காணப் படுகின்றன.

தபால் பெட்டிகளுக்கு ஏற்பட்ட மேற்படி நிலைமை பற்றி எமது நிருபர் மாவட்ட தபால் திணைக்கள அதிகாரிகளிடம் வினாவிய போது, இவ்வாறான தபால் பெட்டிகள் தொடர்பான விபரங்களை தாம் தற்போது சேகரித்து வருவதாகவும் இருப்பு, சீமெந்து ஆகியவற்றினால் உருவாக்கப்பட்ட தபால் பெட்டிகளை தபால் திணைக்களத்தின் தலைமை அலுவலக பொறியியலாளர்களே திருத்த வேண்டும் என்றும் தற்போதைய சூழ்நிலையில் இது சாத்தியப்படாத விடயம் என்றும் இதனால் தாம் மேற்படி தபால் பெட்டிகளை தற்காலிகமாக திருத்தி அமைக்கக்கூடியவற்றை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் தெரிவித்தனர். (ஏ)

### கூட்டம்

நல்லூர் இந்து இளைஞர் மன்றத்தின் கூட்டம் இம் மாதம் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நாவலர் வீதியில் உள்ள வைத்திய கலாநிதி சண்முகலிங்கம் அவர்களது இல்லத்தில் பிற்பகல் 4 30 மணியளவில் நடைபெறவுள்ளது

இக் கூட்டத்தில் இப்பகுதியில் ஏற்பட்ட அண்மைக்கால அசம்பாவிதங்களில் சேதமுற்ற ஆலயங்களின் விபரங்களும் தகவல்களும் திரட்டப் படவுள்ளன. (32)

### திரட்டுகின்றனர்

அராலி கிழக்கு, அராலி தெற்கு கிராமசேவையாளர் பிரிவில் உள்ள உற்பத்தி ஆய்வுக் குழுவினர் விவசாயிகளிடமிருந்து காணி பரப்பளவு. நெற்செய்கை. சிறுதானியம் போன்றவற்றின் விபரங்களைத் திரட்டி வருகின்றார்கள். 24)

# 91 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டியும்



தோற்றம் :

04 - 01 - 1925

மறைவு :

12 - 12 - 1990

திதி:

12 - 03 - 1991

### அமரர் கந்தையா பஞ்சலிங்கம்

(காந்தி)

அன்பின் திருவுருவாய்
பாசத்தின் பிறப்பிடமாய்
இருந்து எம்மை வழிநடத்திய
எங்கள் அன்புத் தெய்வத்தின்
ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்!

சிங்கன் வீதி. (கலைவாணி மில் லேன்) கொக்குவில் கிழக்கு
(R-1177)

இங்ஙனம்
மனைவி, பிள்ளைகள்.
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

### சேவை நலப் பாராட்டு விழா
### தொழில் நுட்பக் கல்லூரி - யாழ்ப்பாணம்

சேவையில் இருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் அதிபர் திரு. சி. இராஜேந்திரா அவர்களின் பிரிவுபசார வைபவம் 17 - 03 - 1991 ஞாயிற்றுக்கிழமை காலை 9 00 மணியளவில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.


கல்லூரியின் மாணவர்களும், பழைய மாணவரும், நிரந்தர, பகுதிநேர விரிவுரையாளர்களும், அலுவலக உத்தியோகஸ்தர்களும் தவறு செய்யாது சமுகம் கொடுக்கும்படி அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

தொழில் நுட்பக் கல்லூரி — மாணவர் விழாக்குழுவினர்
கொக்குவில். யாழ்ப்பாணம். (R-1174)



## நினைவு கூருகின்றோம்

மார்ச் 12



லெப்டினன்ட் உமாராம்

1986ஆம் ஆண்டு கல்முனை பாண்டிருப்பில் சிறிலங்காப் படையினரால் திடீர் சோதனையின் போது ஒரே சயனைற்றை இருவரும் உட்கொண்டு வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட

லெப்.உமாராம் (மு சந்திரகுமார்-கல்லடி, மட்டக்களப்பு
அன்ரனி (கல்முனை)

அதே ஆண்டு மத்திராக் சந்தையில் பொதுமக்கள் ஊர்வலத்தின் மீது தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட தாக்குதலில் உயிரிழந்த பொதுமக்கள்

1987ஆம் ஆண்டு வெடிவிபத்தில் எமைப்பிரிந்த றோம் (மன்னார்)

1988ஆம் ஆண்டு வீரமரணமடைந்த கடாபி (க. பாலிப்போடி - கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு)

1989ஆம் ஆண்டு வீரமரணமடைந்த 2ஆம் லெப். மாதவன் வடிவேல் தவராசா - மட்டக்களப்பு)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

— விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B-2120)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை யின் மடியில்

05
—
04
—
1917



சிவகாமியின் திருவடி களில்

10
—
02
—
1991

### திருமதி இராசா நாகம்மா

(இணுவில் கிழக்கு, இணுவில்)

கல்வீட்டாச்சியென்று பெருமையுடன் வாழ்ந்து
வைரம் இல்லத்தில் நன்மக்களை சீருடன் பெற்றாய்!
இல்லறத்தின் பண்மையை மகிமையுடன் விளக்க
வைத்தாய்!
பல்லாண்டு வாழவைத்தாய் அம்மா! உனையென்றும் மறவோம்!

'சிவஜெயம்'
இணுவில் கிழக்கு,
12-03-1991

பிள்ளைகள் மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(R-1139)

### நினைவஞ்சலி நிகழ்ச்சிகள்

நாளை புதன்கிழமை கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலைய அரங்கில் மாலை 7 00 மணிக்கு வீரமரணமடைந்த வீர வேங்கை நவநீதனின் (நீதன்) 2ஆம் ஆண்டு நினைவஞ்சலியை முன்னிட்டு அருள்வா இசைக்குழுவினரின் புரட்சிப் பாடல்களும் அதைத்தொடர்ந்து விடுதலைப்புலிகளின் முக்கிய பேச்சாளர்களும் உரையாற்றுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### உற்பத்திக் குழு நிலையம்

ஆனைக்கோட்டையில் தமிழீழ ஆய்வு நிறுவன கிராமிய உற்பத்திக்குழு நிலையம் ஒன்று சமீபத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

வைபவத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி மானிப்பாய் பிரதேசப் பொறுப்பாளர் சமீர், பிரச்சாரப் பொறுப்பாளர் ஆஞ்சநேயர், தமிழீழ ஆய்வு நிறுவனத்தைச் சேர்ந்த ஆறுமுகம் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். (21)

### சிந்தனைக்கு

சர்வதேச விவகாரங்களின் இரண்டு
போராட்டங்களுக்கு இடைக்காலத்தில் நடக்கும்
ஏமாற்றுப்படலம், சமாதானம் என்று
பெயர் பெற்று விடுகிறது. — ஆம்ப்ரோஸ் பியர்ஸ்


# ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 12-03-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05


## பாலஸ்தீனத்திற்கொரு லங்கா இந்திய ஒப்பந்தம்

பாலஸ்தீனம் தொடர்பாக பாலஸ்தீனியர்களையும், பாலஸ்தீனியர்களின் பிரதிநிதிகளையும் ஒதுக்கிவைத்துவிட்டு பேச்சுவார்த்தைகள் நடத்தவும் 'பிரச்சினைகளுக்குத் தீர்வு' காணவும் இஸ்ரேலும், அமெரிக்காவும் முயற்சிப்பது போல் தெரிகின்றது.

அரபு - இஸ்ரேல் பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண வருமாறு சவூதி அரேபியாவிற்கும் சிரியாவிற்கும் இஸ்ரேலியப் பிரதமர் இர்ஷக் சமீர் அழைப்பு விடுத்துள்ளார். அதேவேளை வளைகுடாப் போரில் பாலஸ்தீன விடுதலை இயக்கம் ஈராக்கை ஆதரித்தமையால் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த முடியாது அவர்கள் பாலஸ்தீனியர்களின் பிரதிநிதிகள் அல்லவென அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் அறிவித்துள்ளார்.

பாலஸ்தீனப் பிரச்சினை பாலஸ்தீனியர்களுடன் நேரடித்தொடர்புடையது. பாலஸ்தீனியர்களை ஒதுக்கிவைத்து இப்பிரச்சினைக்குத்தீர்வுகாண்பது என்பதுபிரச்சினையை மேலும் சிக்கல் அடையச் செய்யுமே ஒழிய ஒருபோதும் அதைத் தீர்க்கப் போவதில்லை.

ஆனால், பாலஸ்தீனியர்களின் பிரதிநிதிகள் பி.எல்.ஓ தான் என ஐ.நா சபை அங்கீகரித்துள்ளதோடு நாடு இல்லாத பாலஸ்தீனியர்களுக்கு ஐ.நா சபையில் பார்வையாளர்களின் அந்தஸ்தும் வழங்கியுள்ளது. இதனை அமெரிக்காவும் ஏற்றுக்கொண்டுள்ளது. ஆனால், தற்பொழுது ஈராக்கிற்கு ஆதரவாகச் செயற்பட்டமைக்காக பி.எல்.ஓ பாலஸ்தீனியர்களின் பிரதிநிதிகள் இல்லை என எவ்வாறு கூறிவிட முடியும்? வளைகுடாப் போரில் ஜோர்தான், கியூபா, ஜோர்தான் போன்ற நாடுகள் ஈராக்கிற்கு வெளிப்படையாக ஆதரவு அளித்தன. ஆகையினால் அங்குள்ள அரசாங்கங்கள் எல்லாம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை என்று எவ்வாறு கூறமுடியும். அதேவேளை தான். அல்ஜீரியா, சிரியா போன்ற நாடுகளில் பல இலட்சம் மக்கள் ஈராக்கிற்கு ஆதரவாக வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்தார்கள். அவ்வாறாயின் அந்நாடுகளில் உள்ள அரசாங்கங்களை எவ்வாறு அந்நாட்டின் பிரதிநிதிகள் என்று தெரிவிப்பது.

உண்மையில் அமெரிக்காவினதும், இஸ்ரேலினதும் இன்றைய நோக்கம் பலவீனப்பட்ட நிலையில் உள்ள பாலஸ்தீனியர்கள் மீது ஒரு பொருத்தப்பாடற்ற தீர்வொன்றைத் திணிப்பதேயாகும்.

அதேவேளை அரசுகளுக்கிடையில் வளைகுடாப் போரில் முன் எப்பொழுதும் இல்லாதவாறு மனத்தாங்கல்களும், பிரிவினையும் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் பேச்சுவார்த்தை மூலம் இஸ்ரேல் சில வெற்றிகளை ஈட்ட முயற்சிக்கின்றது. இதற்காக வளைகுடாப் போரில் அமெரிக்க சார்பு கூட்டணிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த இஸ்ரேல் முன்வந்துள்ளது. மேலும் மத்திய கிழக்கு தொடர்பான அமெரிக்காவின் கொள்கையில் ஏற்பட்டுள்ள சிறு மாற்றமும், அரபு நாடுகளுக்கான ஆயுத விற்பனையும் இஸ்ரேலின் இம்முயற்சிக்கு மேலும் தூண்டுதலை அளித்திருக்கலாம்.

இப்பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டால் 1978ஆம் ஆண்டில் ஏற்பட்ட கேம்ப் டேவிட் உடன்படிக்கையின் மூலம் எகிப்து பாலஸ்தீனப் பிரச்சினையில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டது போன்று சிரியாவும் சவூதி அரேபியாவும் பிரித்தெடுக்கப்படலாம். சவூதி அரேபியாவிற்கும், இஸ்ரேலுக்கும் இடையில் நேரடியான பிரச்சினைகள் எவையும் இல்லை. ஆகையால் பேச்சுவார்த்தையில் முட்டுக்கட்டைகள் தோன்ற வழியில்லை. அதேவேளை, சிரியாவுடனான பேச்சுவார்த்தையில் சிரியாவிடம் இருந்து இஸ்ரேல் ஆக்கிரமித்த கோலன் குன்றுப் பகுதியை திருப்பி ஒப்படைப்பதன் மூலம் சிரியாவையும் பிரச்சினையில் இருந்து ஒதுக்கிவிடலாம். அதாவது, கேம்ப் டேவிட் உடன்படிக்கை மூலம் சினாய் பகுதியை எகிப்திடம் திருப்பி ஒப்படைத்து எகிப்தை ஓரம் கட்டியது போன்று

இந்நிலையில், தனித்துவிடப்படும் பாலஸ்தீனியர்கள் மீது ஒரு தீர்வைத் திணிக்கலாம் என இஸ்ரேல் நினைக்கின்றது. இதற்கு அமெரிக்காவும் வழமைபோல பின்னணியில் உள்ளது. இவ்வாறான இஸ்ரேலினதும், அமெரிக்காவினதும் செயற்பாடுகள் 1987 இல் இலங்கையின் இனப்பிரச்சினையில் இந்தியா மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு ஒப்பானதாகும். போராடும் மக்களையும் அவர்களின் பிரதிநிதிகளையும் விட்டுவிட்டு 'பிரச்சினைக்குத் தீர்வு' காண்பதற்கான முயற்சியாகும். அதன் விளைவு இந்தியா - இலங்கைத் தமிழருக்கு இடையிலான போரும், சிறிலங்கா - இந்திய சமாதான ஒப்பந்தத்தின் தோல்வியுமாகும்.

இஸ்ரேலின் முயற்சியும் இதேபோன்றதொரு நிலையையே ஏற்படுத்தக்கூடியதாகும். அதேவேளை விடுதலைப் புலிகள் தமது தாயக மண்ணில் இருப்பது போன்று பி.எல்.ஓ போராளிகள் தமது தாயக மண்ணில் இல்லை. ஆகையால் அரபுக்களின் (சிரியா, சவூதி அரேபியா) காட்டிக் கொடுப்பால் சிறிது பின்னடைவு ஏற்படுவதை தவிர்க்க முடியாது போய்விடக்கூடும். ஆனால் ஒருபோதும் பாலஸ்தீனப் பிரச்சினையை அது தீர்க்கப் போவதில்லை.

## சீதனப் பிரச்சினை

## பெண்களுக்குமட்டுமல்ல

### கௌரி

(நேற்றைய தொடர்ச்சி)

இந்தவிதமாக 'சீதனம்' என்பது பெண்வீட்டாரின் அல்லது மாப்பிளை வீட்டாரின் வர்க்க நிலையை, குடும்ப அந்தஸ்தை, குடும்ப கௌரவத்தை, குடும்பத்தின் சமூக செல்வாக்கை, குடும்ப சொத்தை மேலும் ஒருபடி வளர்த்துவிடுவதற்கான ஒரு வர்த்தக பொறிமுறையேயாகும். திருமணப் பெண்ணே இந்த வர்த்தகத்தின் ஊடகமாக உள்ளாள். மனிதர்கள் பண்ட மாற்றுக்கோரி ஊடகமாக தங்கத்தை பணமாக தேர்ந்தெடுத்தது மிகச்சரியானதேயாகும். ஆனால் உயிரும், உடலும் உணர்வுகளும்- ஆசாபாசங்களும், தாபமும்- கோபமும் உள்ள பெண்ணை வர்த்தக ஊடகமாக தேர்ந்தெடுத்தது மிகப்பெரும் சமூக அநீதியாகும். ஆனால் வாழ்க்கை என்பது உயர் அந்தஸ்தால் ஏற்படும் கௌரவம் மாத்திரமே என்று நினைக்கும் பெண்களில் பலர் தமது இந்த நிலையையிட்டு சந்தோஷப்படவும் செய்வது இதைவிட துர்திஷ்டகரமானதொன்றாகும்.

கவர்ச்சி குறைந்த பெண்ணிற்கு கூடிய சீதனம் அவசியப்படுவதன் காரணம்என்ன? பெண் என்பவள் ஒரு கவர்ச்சிப் பொருள் என்பதே இன்றைய பொதுவான சமூக விழுமியமாகவுள்ளது. ஆண்கள் மட்டுமல்ல பெண்களும் இந்த விதமே எண்ணுகிறார்கள். இக் கருத்தோட்டத்தையும் கவர்ச்சி குறைந்த அப்பெண்ணையும் தமக்கு சாதகமாக பயன்படுத்தி ஆண்கள் தமது குடும்ப அந்தஸ்தை துரிதகதியில் உயர்த்த முற்படுவதே இதற்கான காரணமாகும்.

சீதனத்தால் துன்புறுவது பெண்கள் மாத்திரந்தானா? சீதனம் என்ற பொறிமுறையால் குடும்ப அந்தஸ்தை உயர்த்துவதில் வெற்றிகண்ட ஆண்கள், பெண்கள் இருசாராருமே இன்புறுகிறார்கள். சீதனம் என்ற பொறிமுறையால் தமது குடும்ப அந்தஸ்தை அல்லது சொத்தை இழந்த ஆண்கள் பெண்கள் இருசாராருமே துன்புறுகிறார்கள். சீதனம் என்ற பொறிமுறையைப் பயன்படுத்தி தமது குடும்பத்தின் சமூக நிலையை உயர்த்தவும் முடியாமல், இருக்கும் நிலையில் இருந்து கீழ்நோக்கி இறங்கவும் விருப்போ, துணிவோ இன்றி வாழும் குடும்பங்களின் ஆண்களும் பெண்களும் துன்புறுகிறார்கள். இக் குடும்பங்களில் பல பெண்கள் வாழாவெட்டியாகவும் வாழ்வைக் கடத்துகிறார்கள்

தமது கணவனின் காதலுக்கும், அன்புக்கும் ஏங்கும் பெண்கள் சீதனம் என்ற பொறிமுறையால் திணிக்கப்பட்ட தமது கணவனிடமிருந்து இது கிடைக்காததைக் கண்ணுற்று எதுவும் செய்ய முடியாத நிலையில் வெறுப்பான ஒரு வாழ்க்கையை அவனுடன் வாழ்ந்து தொலைக்கிறார்கள்.

தனது குடும்ப அந்தஸ்தை உயர்த்திக் கொள்வதற்காக சீதனத்திற்காக பெண்வீட்டாரிடம் தன்னை விற்றுவிட்ட ஆண்கள் தமது மனைவியின் எடுபிடிகளாக வாழ்ந்து துன்புறுகிறார்கள். இவ்விதமான 'வீரபுருஷர்கள்' யாழ்ப்பாணத்தில் ஏராளம், தாராளம். மெத்தப்படித்த புத்திஜீவிகள் மத்தியிலேயே இவர்கள் ஏராளமாக காணப்படுகிறார்கள்.

சீதனம் இன்மையால் இல்லற வாழ்வில் ஈடுபடும் வாய்ப்பிழந்து வாடும் யுவதிகள் பற்றி எப்போதும் பெரிதாக பிரஸ்தாபிக்கப் படுகின்றது இது சில ஆயிரக்கணக்கானதேயாகும். மனவிருப்பின்றி 'சீதனத்தை' அடிப்படையாக கொண்டு அமைக்கப்பட்ட 'இல்லறங்களில்' கணவனும் மனைவியும் மன அமைதியின்றி, தமது துன்பத்தை வெளியில் சொல்லவும் முடியாமல் அவதியுறும் பத்தாயிரக் கணக்கானவர்கள் பற்றி அடிக்கடி எல்லோரும் மறந்தே விடுகிறார்கள். அதே போல் சீதனம் கொடுத்ததால் தமது வயோதிபகால பற்றுக்கோடுகளை இழந்து அவதியுறும் முதுமையடைந்த பெற்றோர்கள் பற்றியாருமே பிரஸ்தாபிப்பதில்லை.

ஆகவே சீதனம் என்பது பெண்களிற்கான ஒரு பிரத்தியேக பிரச்சினையல்ல, மாறாக அது சமூக முழுமையின் ஒரு பொதுப்பிரச்சினையாகும். இல்லறம் என்பது ஆண்பெண் இருசாராருக்கும் இடையிலான காதலை அடிப்படையாக கொண்டு அமைக்கப்படும் ஒருவகை உறவேயாகும். இல்லறத்தை தோற்றுவிப்பதிலும் பாதுகாப்பதிலும் காதல் ஒன்றைத் தவிர வேறு எதுவும் தலையிடக் கூடாது என்ற நிலை தோன்றும் போதே மனவிகாரமும், விரக்தியுமற்ற மனிதர்கள் தோன்றுவார்கள். அப்போது தான் ஜீவத்துடிப்பும், சுதந்திர உணர்வும் மிக்க சமுதாயம் தோற்றம் பெறும். இதற்கெதிரான சக்தி மிக்க தடைகளில் ஒன்றாக சீதனமும் அமைந்துள்ளது என்பதை நாம் என்றும் நினைவில் கொள்வோமாக.

> தனது குடும்ப அந்தஸ்தை உயர்த்திக் கொள்வதற்காக, சீதனத்திற்காக பெண் வீட்டாரிடம் தன்னை விற்றுவிட்ட ஆண்கள் தமது மனைவியின் எடுபிடிகளாக வாழ்ந்து துன்புறுகிறார்கள். இவ்விதமான 'வீரபுருஷர்கள்' யாழ்ப்பாணத்தில ஏராளம், தாராளம, மெத்தப் படித்த புத்திஜீவிகள் மத்தியிலேயே இவர்கள் ஏராளமாகக் காணப்படுகிறார்கள்.




காது நிறைந்த கணவன்

நன்றி: சிரித்திரன்

## போருக்கான செலவீட்டை அபிவிருத்திக்கு ஒதுக்கலாம்

### - டி. பி. விஜயதுங்கா

(கொழும்பு)

''வடக்குக் கிழக்கு மாகாணத்தில் நிலவி வரும் பிரச்சினையை தீர்ப்பதற்குரிய காலம் வந்து விட்டது'' என சிறிலங்காப் பிரதமரும், பாதுகாப்பு இணை அமைச்சருமான டி.பி. விஜயதுங்கா தெரிவித்துள்ளார்

இந்தப் பிரச்சினையை விரைவில் தீர்க்க வேண்டும் என்பதில் நாம் அக்கறையாக உள்ளோம் என்று உறுதியாக தெரிவிப்பதாக டி.பி. விஜயதுங்கா அறிவித்துள்ளார்

நிதி அமைச்சராகவும் கடமையாற்றும் டி.பி. விஜயதுங்கா தற்பகுதியின் பாதுகாப்புக் கென செலவிடப்படும் 50 கோடிக்கும் அதிகமான பணத்தை அங்கு அமைதியை ஏற்படுத்துவதன் மூலம் அபிவிருத்திக்கு பயன்படுத்தலாம் என்றும் குறிப்பிட்டார்.

## ஜனதா தளத்துடன் சேரலாம்

(லக்னோ)

ஜனதா தள கட்சியோடு சேரக்கூடிய சந்தர்ப்பம் சில நேரங்களில் கிடைக்கலாம் என இந்தியப் பிரதமர் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

தற்போது இத்தகைய யோசனை எதுவும் இல்லாவிட்டாலும் அரசியலில் எல்லாமே சாத்தியமாகும் என்பதற்கிணங்க ஜனதா தளத்துடன் சேருவதற்குரிய சந்தர்ப்பமும் வரலாம் எனக் குறிப்பிட்டார்.

